சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

HMOP No. 97/2019

பெயர். திரு.ராஜ்குமார் நாள் 12.03.2025
த/பெ. சின்னசாமி

<u>மனுதாரர் சா.2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. மனுதாரரின் தகப்பனாரும், நானும் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் காதலித்து வந்தனர் என்றால் எனக்கு தெரியாது. திருமணத்திற்கு முன்பே எதிர்மனுதாரர் 6 மாத கருவுற்றிருந்தார் என்றால் சரியல்ல. அதனால் நான் மனுதாரர் மற்றும் அவரின் தகபப்னார் ஆகியோர் எதிர்மனுதாரரை மிரட்டி கொலை செய்து விடுவதகாக் கூறினோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர், மனுதாரரை செய்யக் கோரி கேட்டதற்கு நாங்கள் மறுத்துவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. இதுசம்மந்தமாக அச்சரப்பாகம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நானும் ஒரு பஞ்சாயத்தாரராக வந்தேன் என்று சொன்னால் கிராமத்தினருடன் வந்தேன். எதிர்மனுதாரர் கருவுற்றதற்கு மனுதாரர் காரணம் என்றும், அதனால் மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்படும் என்பதால் மனுதாரரர் எதிர்மனுதாரரரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. அதன் விளைவாக அச்சரப்பாகம் முருகன் கோயிலில் 21.11.2016 அன்று இருவருக்கும் திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். திருமணத்திற்கு பிறகு இருவரும் எத்தனை நாட்கள் சேர்ந்து வாழுந்தார்கள் என்றால் இருவரும் சேர்ந்து வாழவே இல்லை.

2. திருமண அழைப்பிதழ் அச்சடிக்க நானும் உடன் சென்றேன். அச்சரப்பாக்கம் கணபதி அச்சகத்தில் திருமண அழைப்பிதழ் அச்சிடப்பட்டது.

அதில் உறவினர்கள் பெயர் மட்டும் போடப்பட்டது. என்னுடைய பெயரும் அதில் போடப்பட்டது. ம.த.சா.ஆ. 1 திருமண அழைப்பிதழ் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு அச்சடிக்கப்பட்ட திருமண அழைப்பிதழ் அல்ல. ம.த.சா.ஆ.1 வழக்கிற்காக நானும், மனுதாரரும் சேர்ந்து தயார் செய்தோம் என்றால் சரியல்ல. குற்ற வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக ம.த.சா.ஆ.1 ஐ நாங்கள் புனைந்து கொண்டோம் என்றால் சரியல்ல. மனுதாரர் தான் செய்த தவறை மறைப்பதற்காக பொய்யான மனுவை தாக்கல் செய்து அதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.